
# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 101
செப்டம்பர் 2017




## ஆசிரியர் தினம்

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*

# விடியல்
## The Dawn

இதழ்-101 , செப்டம்பர் -2017

**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**
**முனைவர் சி.ரா.சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**
**திரு. மு.சதீஸ்குமார்**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**
திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
திரு. செ.தங்கராஜ்
முனைவர் ப.பிரதீபா
முனைவர் சு.முப்பிடாதி
திரு. மு.சத்தியராஜ்
முனைவர் ப.சிலம்பரசன்
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. து.சூசைபிரகாசம்
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா

### தலையங்கம்
## ஆசிரியர் தினம்



**‘எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு’**

என்ற பொன்மொழிக்குச் சான்றாக இருப்பவர்கள் ஆசிரியர்கள். ஒரு வெற்றுத்தாளாய்க் கல்வியில் காலடி எடுத்து வைக்கும் மாணவப்பூக்களை ஒரு புத்தகமாய் வெளிக்கொணர்பவர்கள் ஆசிரியர்கள். ஒரு மெழுகுவர்த்தியாய் தன்னை உருக்கி மாணாக்கர்களின் பாதையில் வெளிச்சங்களைப் பாய்ச்சும் தெய்வங்கள் ஆசிரியர்கள். அப்படிப்பட்ட தெய்வங்களை நாம் பூஜிக்கும் நாளே இந்த ஆசிரியர் தினம்.

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:
**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் **05.09.1888-ம்** ஆண்டில் பிறந்த **சர்வ பள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன்** அவர்களின் பிறந்த நாளில் மரியாதை செலுத்தும் விதமாக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

நமக்குக் கல்விக் கண்களைத் திறந்து வைக்கும் ஆசிரியத் திலகங்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் இனிய நாளாக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

மாணவர்களுக்குக் குணநலம், தன்னம்பிக்கை, அடிப்படை கடமைகள், சுயகட்டுப்பாடு, பொதுநலநோக்கு, தலைமைத்தகுதி, நல்லொழுக்கம், நாட்டுப்பற்று போன்றவற்றைக் கற்பிக்க கடமைப்பட்டவர்கள் ஆசிரியர்கள். ஒவ்வொரு மாணவனின் பலத்தையும் பலவீனத்தையும் கண்டறிந்து அடையாளப்படுத்துபவர்கள் ஆசிரியர்கள்.

அர்ச்சுணனுக்கு துரோணாச்சாரியார் போல், ராமாயணம் என்ற வரலாற்றுக் காவியத்தைப் படைக்கும் அளவிற்கு வால்மீகி உருவாகக் காரணமான நாரதரைப்போல், விவேகானந்தருக்கு ஒரு பரமஹம்சரைப் போல், ஒவ்வொரு மாணாக்கருக்கும் ஓர் ஆசிரியர் இன்னும் வாழ்வியல் ஆசானாக இருக்கத்தான் செய்கிறார்.

**'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்'** என்பதுபோல முடியுடை வேந்தர்களாக இருந்தாலும் புலவர்களைப் போற்றியதற்குக் காரணம் அவர்கள் குரு என்பதினாலேயேதான். மாபெரும் இதிகாசமாகப் போற்றப்படும் மகாபாரதத்திலும் குரு கேட்டதிற்கு இணங்க மாணவன் தன் கட்டை விரலை வெட்டிக் கொடுத்த கதையை நாடறியும், கிரேக்க வரலாற்றில்கூட ஆசிரியர்கள் சாக்ருடிஸ், அவன் மாணவன் பிளேட்டோ, அவர் மாணவர் அரிஸ்டாட்டில், அவர் மாணவர் அலெக்சாண்டர் இப்படி ஆசிரியர் உறவு அறிவுலகம் அனைத்துமே போற்றுதலுக்குரிய ஒரு புனிதமான உறவாகவே இருந்து வந்திருக்கிறது.

கல்வியை அளிப்பவர்கள் மதிக்கப்படுவதும், துதிக்கப்படுவதும் ஒரு நாகரிக சமுதாயத்தின் அடையாளமாகும்.

**‘தடைக்கல்லே உமக்கோர் படிக்கல்’** என்ற ஊக்கத்தையும் உணர்வுகளையும் ஆசிரியர் ஊட்டுவதினாலேயே மாணாக்கர்கள் சாதனையாளராக மாறுகின்றனர். ஒவ்வொரு சாதனைக்குப் பின்னாலும் ஆசிரியர்களின் பங்கு ஏதோ ஒரு விதத்தில் ஒளிந்திருக்கிறது. உழைத்து வளர்த்த திறமையை, தகுதியைத் தக்கத் தருணத்தில் வெளிக் கொணர்ந்து வாய்ப்புகள் அளித்து வழிகாட்டி மேம்படுத்துபவர் ஆசிரியப் பெருமக்களே. அர்ப்பணிப்பும், தொண்டுள்ளமும், திறமையும் படைத்த ஆசிரியர்கள் மாணவர்களின் வருங்காலத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் செம்மையாக்கப் பாடுபடுபவர்கள்.

**“பயிற்றுப் பலகல்வி தந்து - இந்த**

**பாரை உயர்த்திட வேண்டும்”** என்ற பாரதியின் கனவை நனவாக்கவல்ல சமுதாய ஏணிப்படிகளான ஆசிரியர்கள் போற்றுதலுக்கும், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள். வாழ்வைக் கற்றேன், வளம்பல பெற்றேன், ஊழ்வினை தந்த உன்னை உலகம் உள்ளவரை போற்றும் என் உள்ளம் என்று நன்றி சாற்றும் மாணாக்கர்களோடு சேர்ந்து வாழ்த்த வருகிறது தமிழ் விடியல்...

**அன்பினை வழக்கும் அட்சய பாத்திரங்களே!**
**அறிவுச் சுடர் ஏத்தும் அணையா தீபங்களே!**
**அறிவுப் பசி தீர்க்கும் கற்பக விருட்சங்களே!**
**அன்பின் வழி நடத்தும் முன் மாதிரிகளே!**
**அறிவுச்சுடர் தந்து அறம் தழைக்க**
**அச்சாணியாய் விளங்கும் ஆசான்களே!**
**அடிமலர் பணிகிறேன் உங்கள் ஆத்மார்த்த**
**அறிவுப்பணிக்கு என் ஆசிரியப்பா வாழ்த்துக்கள்.....**

**இணையாசிரியர்**

# உள்ளுறை

## ஆசிரியர் தினம்

கவிதைகள்............................... 05 - 15

பொது அறிவு………………..........16 - 17

அன்னைதெரசா..........................19 - 19

மகளிர் – கவிதை…………......22 - 23

பழமொழிகள்...............................26 - 27

முயற்சி,மழை – கவிதை…...31 - 32

# கவிதைகள்

## நட்பு

நட்பு என்னும் நூலகத்தில்
நான் கண்டெடுத்த
புத்தகம் நீ!!
சில கதைகள் சிறுகதையாக
முடிந்து விட
நீ மட்டும்
என் வாழ்வில் தொடர்கதையாக
வருவாயாக...

**ச.காவியா**
**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு.**

## இசை

அலை அலையாய் வருவது கீதம்
ஆடாதவர்களைக் கூட ஆடவைப்பது சங்கீதம்
இசை என்பது வெறும் சத்தமில்லை
அனைவரையும் ஈர்க்கும் தெய்வீகம்
எண்ணத்தில் உதிக்கும் தோற்றத்தை
ஏழைபாழைகளுக்குப் புரியும்படிக் கூறும்
ஐம்புலன்களையும் அடக்கி வைக்கும்
அற்புத ஒலியே இசை.......

**ப. யுவன் சங்கர்**
**முதலாமாண்டு கணினி அறிவியல் துறை 'ஆ' பிரிவு.**

# ஒரு பெண்மையின் உருக்கம்

ஒரு ஆணிடம் நட்பாக பேசினால்
இந்தச் சமூகம் கொடுக்கும்
கேவலமான பட்டங்களை....?
ஆண் மகனே நீ அறிவாயா...?
பேருந்து நெரிசலில்
காமுகர்களின் கொடுமைகளை
ஆண் மகனே நீ அறிவாயா...?
பெண்களை விடவா
நீ வலிகளையும் வேதனைகளையும்
அனுபவித்திருப்பாய்....?
ஆணே பெண்ணை விட
உன் வேதனைகள் குறைவு
குறைவான வேதனைகளுக்கே
குடிகாரனாக அலைகின்றாய்...!
பெண்களைப் போன்ற
வேதனைகளை
நீ பட்டுவிட்டால்
உலகை வெறுத்து
ஒரேடியாகப் போய்விடுவாய்!
விட்டுத்தள்ளடா ஆண் மகனே...!
குடி குடியை மட்டுமல்ல
உன் குலமதையே கெடுத்துக்
குட்டி சுவராக்கிவிடும்....!!!!!

**மோ.சொர்ண பிரபா**
**வேதியியல் இரண்டாம் ஆண்டு**

## கலாம் - மொழிகள்

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே
அது உன்னைக் கொன்றுவிடும்
கண்ணைத் திறந்து பார்
நீ அதை வென்று விடலாம்.

இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும்
வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம்
ஒதுக்கப்பட்டுள்ளது.
ஆனால் அந்தப் பக்கத்தை
இந்த உலகையே படிக்க வைப்பது
உங்கள் கைகளில் தான் உள்ளன.

வெற்றி பெற வேண்டும் என்ற பதற்றம்
இல்லாமல் இருப்பதுதான்
வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி.
வாய்ப்புக்காக காத்திருக்காதே...
உனக்கான வாய்ப்பை நீயே
உருவாக்கிக்கொள்...
சிந்திக்கத் தெரிந்தவனுக்கு
ஆலோசனை தேவையில்லை....

கனவு காணுங்கள், கனவு என்பது
உங்கள் தூக்கத்தில் காண்பது அல்ல,
உங்களைத் தூங்க விடாமல்
பண்ணுவது எதுவோ, அதுவே கனவு.....

நமது பிறப்பு ஒரு சம்பவமாக

இருக்கலாம்

ஆனால்...

இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்

**ரா. பிரீத்தி**

**இளங்கலைத் தமிழ் இலக்கியம் மூன்றாமாண்டு.**

## நன்றி!!!

நாம் உயிர்த்தெழும்முன்
கருவறையிலும் அவள் உயிர்!!
பிரியும்வரை கருவிழியிலும்
நம்மைச் சுமக்கும் அன்னையை
என்றென்றும் நம் மனதில்
சுமப்போம் அவளை அன்பால்
நேசிப்போம்.
வாழ்வே தவம் தாய்மை ஒருவரம்
பெண்மைக்கு...
என் தாய்மைக்கு நன்றி!!!

## கருவறையில் மட்டும்..

கண்கள் இல்லாமல் ரசித்தேன்
காற்று இல்லாமல் சுவாசித்தேன்
வார்த்தை இல்லாமல் பேசினேன்
கவலை இல்லாமல் வாழ்ந்தேன்
என் தாயின் கருவறையில் மட்டும்....

**ர.தினேஷ்**

**இரண்டாமாண்டு இயற்பியல் துறை ‘அ’ பிரிவு**

## சிறந்த மருத்துவர் – அம்மா

என் விழிகளில் அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகளில் உறங்கிட
இம்சையை ரசித்திட
வெற்றியில் களித்திடத்
தோல்வியில் துவண்டிட
முத்தத்தில் மகிழ்ந்திட
உதிரத்தைத் துடைத்திட
உயிருடன் கலந்திட
இன்பத்தைப் பெருக்கிட
இன்னலைக் களைத்திட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
இனிய தேவதை அம்மா....

**கு.கார்த்திக்**

**இரண்டாமாண்டு கணிதவியல் துறை ‘ஆ’ பிரிவு**

## அன்னையர் தினம்

அறியா வயதில் ஆதரித்து
அறியும் வயதில் அரவணைத்து
புரியா வயதில் புதுப்பித்து
புரியும் வயதில் ஊக்குவித்தாய்
எந்தன் தாயே! எனக்காக நீயே!
மற்றொரு பிறவி என்றொன்றிருந்தால்
மீண்டும் நீயே என் தாயாக வேண்டும்...

**சி.பிரசாந்த்**

**இரண்டாமாண்டு கணிதவியல் துறை ‘ஆ’ பிரிவு**

## விரும்பு

என்னை
யாருக்கும் பிடிக்கவில்லை என்று
கவலைப்படுவதற்கு நீ
சந்தையில் விற்கும் பொம்மையல்ல....
நீ என்பது
நீயே...........
உன்னை உனக்குப் பிடித்தால் போதும்!!!

## தவறு

சிறுவர்களாய் இருக்கும்போது
பென்சில் உபயோகித்தோம்..
பெரியவர்களாய் ஆன பின்
பேனா உபயோகித்தோம்
ஏன் தெரியுமா?
சிறுவயதில் செய்யும் தவறுகளை
அழிக்க முடியும்
ஆனால்........
வயதான பின்னர்
செய்கின்ற தவறுகளை
அழிக்க முடியாது.

**பி. விஜய்**
**முதலாமாண்டு கணினி அறிவியல் துறை 'இ' பிரிவு.**

## கல்வி

கல்வி என்னும் கடலினிலே
பாடம் என்னும் படகினிலே
புத்தகம் என்னும் பொக்கிஷத்தைப் பெற்று

ஆசிரியர் என்னும் கலங்கரை விளக்கின்
துணையோடு
வெற்றி என்னும் கரைநோக்கிச்
செல்கின்றேன்...!!!

**எம்.ஐஸ்வர்யா**

**முதலாமாண்டு கணிதவியல் 'ஆ' பிரிவு**

## வாழ்க்கைத்தத்துவம்

எல்லாம் இழந்த பின்னும்
எவனிடம் நம்பிக்கை
மிச்சமிருக்கிறதோ அவனே
வெற்றிக்குத் தகுதியானவன்....

சிரிப்பில்லாத வாழ்க்கை
சிறகு இல்லாத
பறவைக்கு சமம்....
பறவைக்கு அழகு சிறகு
நமக்கு அழகு சிரிப்பு....

**செ.கௌதமி**

**முதலாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

## நட்பு

உறங்கும் நேரத்திலும்
ஊக்கம் கொடு
கவலைகள் மறைய
சக்தி கொடு

எந்த நிலையிலும் நீ இருக்கிறாய்
என்ற எண்ணம் கொடு தோழா.
இனி பிறப்பு எப்போது என்று தெரியவில்லை..
இறப்பு எப்போது என தெரியவில்லை...
வாழ்கின்ற இந்த காலம் முழுவதும்
உன் தோழனாக வாழ
வாய்ப்பு கொடு...

**செ.திலீப்ராஜ்**

**முதலாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

## மனிதனின் வாழ்க்கை

பல வெற்றியையும்
தோல்வியையும் கண்டோம்
அறுசுவையாய் நாற்சுவைகளையும் உண்டோம்
கல்வியெனும் ஆலமரத்தைச் சுற்றினோம்
வாழ்க்கையெனும் இரயிலில் பயணித்தோம்
எங்கள் முடிவு எங்கே என்று
தேடிக்கொண்டிருக்கிறோம்.....

**க.பிரேம்குமார்**

**முதலாமாண்டு கணிதவியல் 'அ' பிரிவு**

## வாழ்க்கை

உன் வாழ்க்கைக்கு
முற்றுப்புள்ளி வைத்துவிடாதே!
உலகம் உன்னைக் கேள்விக்குறியுடன்

பார்க்கும்.

“காற்புள்ளி” வைத்துக்கொண்டே இரு!

உலகம் உன்னை ஆச்சரியக்குறியுடன்

பார்க்கும்....

**க.திவ்யா**

**முதலாமாண்டு கணிதவியல் ‘அ’ பிரிவு**

## நட்பு

பெருமை புகழ் ஆகியவற்றில் இருந்து
வருவது அல்ல நட்பு!
துயரம் கஷ்டம் என்ற இருகற்களை
துகளாக மாற்றி
துகளை மண்ணாக மாற்றி – அந்த
மண்ணின்மீது கால் பதித்து வெற்றி
பெற உதவுவது நட்பு! - இவை
அன்பு நட்பு என்ற இருகண்களால்
உருவானதே நட்பு! நட்பு....!

**செ.முனிராஜ்**

**முதலாமாண்டு கணிதவியல் ‘அ’ பிரிவு**

## வாழ்க்கை

வாழ்க்கை
ஒரு நாடகமேடை
அதில் நடித்திடும்
நடிகர்கள் நாம்...
வாழ்க்கை

ஒரு புத்தகம் என்றால்
அது கூறிடும் பாடம் நாம்.....

**பா.ஸ்ரீனிவாஸ்**

**இரண்டாமாண்டு கணிதவியல்துறை ‘ஆ’ பிரிவு**

## சுதந்திர தின விழா..

போரிடும் உலகை
வேரோடு சாய்த்த
விழா...
புதுமை இந்தியாவைப் படைத்த
தினவிழா...
அந்நிய ஆட்சியை
முற்றிலும் அழித்த
விழா...
சுதந்திர தின விழா....

**சே.மோகன்குமார்**

**இரண்டாமாண்டு கணிதவியல்துறை ‘ஆ’ பிரிவு**

## நட்பு

சண்டையிட்டு ஐந்து நிமிடத்தில்
ஏதும் நடக்காதது போல்
உரிமையுடன் பேசும் நட்பு
உடனிருந்தால் வாழ்க்கை
சொர்க்கம்தான்..
தினம் திட்டும் மற்றவர்களின்

வார்த்தைகளைவிட
திட்டாமல் நகரும் நண்பனின்
மௌனம் கொடியது...

## வாழ்க்கை

ஒரு குழந்தை எழுதும் கிருக்கல்தான்
வாழ்க்கையா...!
அதில் அர்த்தம்தேடி அலைவதே
வேட்கையா..!
அர்த்தம் புரியும்போது
வாழ்க்கை மாறுமோ...!
வாழ்க்கை மாறும்போது
அர்த்தம் மாறுமோ...!
அது கனவுக்காற்றில் மிதந்ததே
அது மிதந்துகொண்டு சிரிக்கிறதோ...!

**கு.தேசிகன்**

**இரண்டாமாண்டு கணிதவியல்துறை 'ஆ' பிரிவு**

## நட்பு

நட்பு என்பது
ஆழ்கடல்.
கரையில் நின்று பார்த்தால்
வெறும் அலைகள் மட்டும்தான்
தெரியும்...
மூழ்கிச் சென்றால்தான்

உன்னைப்போன்று
முத்துக்கள் கிடைக்கும்
என் நண்பா…..

**அ.செ.அபிசேக்**

**இரண்டாமாண்டு கணிதவியல்துறை 'ஆ' பிரிவு**

## பொது அறிவு

1. இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் கடற்கரையைக் கொண்டுள்ளன? **விடை** : 8 மாநிலங்கள்.
2. விண்வெளிக்கு முதன்முதலில் சென்ற பெண் யார்? **விடை** : வாலண்டினா தெரஸ்கோவா.
3. உடலில் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துவது எது? **விடை** : இன்சுலின் சுரப்பிகள்.
4. தாவரங்களுக்கும் உணர்வு உண்டு என்பதைக் கண்டறிய பயன்படும் கருவி எது? **விடை** : கிரைசோகிராப்.
5. சாதாரண கண்களுக்கு தெரியக்கூடிய அருகில் உள்ள நட்சத்திரம் எது? **விடை** : ப்ராக்சிமா செண்டாவுரி.
6. ஒளி செல்லும் வேகத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்? **விடை** : ரோமர்.
7. தும்பா ராக்கெட் ஏவுதளத்தை நிறுவியவர் யார்? **விடை** : விக்ரம் வி.சாராபாய்.
8. உலக உணவு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது? **விடை** : அக்டோபர் 16.
9. பிறந்த குழந்தைக்கு முதலில் போடப்படும் நோய் தடுப்பூசி எது? **விடை** : BCG.

10. **பூமியில்** உள்ள மொத்த நீரின் அளவில் குடிப்பதற்கு ஏற்ற நீர் எத்தனை விழுக்காடு? **விடை** : 13 விழுக்காடு.

**க.பிரியதர்ஷினி**

**இரண்டாமாண்டு கணிதவியல்துறை ‘ஆ’ பிரிவு**

## முன்னால் செய்..!

பேசும் முன்னால்
கவனமாகக் கேள்!
எழுதும் முன்னால்
யோசிக்கத் தவறாதே!
செலவழிக்கும் முன்னால்
சம்பாதிக்கப் பார்!
பிறரை விமர்சிக்கும் முன்னால்
உன்னை எண்ணிப் பார்...

**நா.லட்சுமி பிரியா**

**இரண்டாமாண்டு கணிதவியல்துறை ‘ஆ’ பிரிவு**

## தன்னம்பிக்கை

ஓடிக் கொண்டே இரு
உன் கால் வலிக்கும்வரை அல்ல
உன் லட்சியத்தை
அடையும் வரை!!
உன்னை வீழ்த்த ஏங்கும்
ஒரு கூட்டம்

கூடவே இருந்து குழி பறிக்கும்
இன்னொரு கூட்டம்..!!
சோதனைகளைஎல்லாம் சாதனையாக்க
ஓடிக் கொண்டே இரு
துவண்டுவிடாமல் ஓடிக்கொண்டே இரு
எதிர்ப்புகளை ஏணியாக்கி
உன் லட்சியப் பாதையை நோக்கி...!!!

**லீ.சிந்துஜா**

**இரண்டாமாண்டு கணிதவியல்துறை 'ஆ' பிரிவு**

## உன்னை

உன்னை நேசிப்பவர்களை
எண்ணி சந்தோஷப்படு!
உன்னை வெறுப்பவர்களை
எண்ணி துக்கப்படாதே!
உன்னை ஆதரிப்பவர்களை
எண்ணி உற்சாகப்படு!
உன்னை எதிர்ப்பவர்களை
எண்ணிச் சோர்வடையாதே!
உன்னை உயர்வாக
நினைப்பவர்களுக்கு நன்றியோடிரு!
உன்னை அற்பமாக
நினைப்பவர்மேல் வெறுப்படையாதே!
உனக்கு உதவியவர்களை
ஒருபோதும் மறவாதே!
உனக்கு உதவாதவர்களை
எண்ணி கசக்காதே!

உன்னைப் பாராட்டுகிறவர்களை
எண்ணி திருப்தியாயிரு!
உன்னை விமர்சிக்கிறவர்களை
எண்ணி அதிருப்தியடையாதே....!!

**ப.சவுமியா**

**இரண்டாமாண்டு கணிதவியல்துறை 'ஆ' பிரிவு**

## காற்று

தினமும் எழும் சூரியனே..!
உன்னை யார் எழுப்புகிறார்..?
துணையே இல்லாத நிலவே
யாருக்காக தினமும் காத்திருக்கிறாய்...
மேகமே உனக்கு என்ன அவ்வளவு
சோகம், மழையாய்ப் பொழிகிறாய்..!
வானவில்லே
ஏழுவண்ணத்தில் யாருக்காகப் பாதை
அமைக்கிறாய்...!
எல்லாம் மனிதனுக்காக இல்லை – ஆனால்
நாம் எல்லாத்தையும் எடுத்துக்கொண்டோம்....!

**ரா.புவனேஸ்வரி**

**இரண்டாமாண்டு கணிதவியல் துறை 'ஆ' பிரிவு**

## அன்னை தெரசா

தண்டனை கொடுப்பதற்கு
தாமதம் செய் - ஆனால்

மன்னிப்புக் கொடுப்பதற்கு
யோசிக்காதே!!
அன்பு என்பது
சொற்களில் வாழ்வதில்லை
அன்பைச் சொற்களில்
விளக்கவும் முடியாது
செயல்களில் விளக்கம்
பெறுகிறது அன்பு...
எல்லோரும் ஒருநாள் இறப்போம்
அதற்குமுன் அனைவருடனும்
அன்பு கொண்டு நடப்போம்...
இந்த உலகில்
நம் கண் முன்னால் காணும்
ஒருவரையும் நேசிக்க
இயலவில்லை என்றால்
கண்ணுக்குத் தென்படாத
கடவுளிடம் எவ்வாறு அன்பை
செலுத்த இயலும்...

**தொகுப்பு :**
**பெ.புவனேஸ்வரி**

**இரண்டாமாண்டு கணிதவியல் துறை 'ஆ' பிரிவு**

## விடுகதைகள்

1. மட்டை உண்டு, கட்டை இல்லை, பூ உண்டு, மணம் இல்லை அது என்ன? **விடை :** சீப்பு.
2. வகை வகையாய் தெரியும் வண்ணப்படம், கண்மூடிக்காணும் காட்சிப்படம் அது என்ன? **விடை :** கனவு.

3. மூன்றுகால் குள்ள அக்கா, பாரம்தாங்கி, நெருப்பை சுமந்து சோறு சமைப்பாள் அவள் யார்? **விடை** : அடுப்பு.

4. மென்மையான உடம்புக்காரன், பாரம் சுமக்கும் கெட்டிக்காரன் அது என்ன? **விடை** : நத்தை.

5. பட்டனைத் தட்டினால் சட்டென விரியும் அது என்ன? **விடை** : குடை.

6. நீரிலும், நிலத்திலும் வாழ்வான், பாறைக்குள்ளும் பதுங்கி வாழ்வான் அவன் யார்? **விடை** : தவளை.

**செ.தங்கராஜ்**

**உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை**

## சுதந்திரம்

ஆடி மாதத்தில் அந்திப்பொழுதில்
சில்லென்ற காற்றும் ஜோரான மழையும்
நம் மனதை குளிர்விக்கும் நேரத்தில்
அனைவருக்கும் நான்குநாள் விடுமுறையாம்
பிரிந்திருந்த சொந்தமெல்லாம்கூட
அனைத்து இல்லங்களும் மகிழ்ந்திருக்க
வந்ததே கோகுலாஷ்டமி!!
குழந்தைகள் கிருஷ்ணனாய் நடைபோட
மனக்கஷ்ட இஷ்டங்களை வெளிப்படுத்த
வந்ததே சுதந்திர தினம்!!

**வீ.ரூபஸ்ரீ**

**முதலாமாண்டு கணிதவியல் ‘இ’ பிரிவு**

## விடுகதைகள்

1. விளக்கைச் சுமந்தபடி விடியவிடிய பறப்பான் அவன் யார்? **விடை** : மின்மினிப்பூச்சி.

2. தட்டினால் தாளம் தரும் உடைத்தால் தாகம் தீரும் அது என்ன? **விடை** : தேங்காய்.

3. விளக்கைச் சுமந்தவனுக்கு விடிய விடிய தூக்கம் இல்லை அவன் யார்? **விடை** : மெழுகுவர்த்தி.

4. ஓரெழுத்தில் உயிர் வாழ்வான் ஈரெழுத்தில் அழிந்து விடுவான் அவன் யார்? **விடை** : தீ, நீர்.

5. இவள் பாடினால் அழகு, அவளோ ஆடினால் அழகு அவர்கள் யார்? **விடை** : குயில், மயில்.

**வ.சரண்யா**

**முதலாமாண்டு கணிதவியல் ‘அ’ பிரிவு**

## மகளிர் தினம்

ஆணின்றி அணுவளவும்
அசையாது உலகு
என்றார் பெரியோர்...
பெண்ணின்றி அசைவதில்லை
எதுவும் என்று சொல்ல
ஒரு தினம் மகிழ்வு தரும்
மகளிர் தினம்...
முக்கனிகளுக்கு ஒப்பானவள்
முப்பாலுக்கு நிகரானவள்
அன்பின் வடிவானவள்
அறிவின் ஊற்றானவள்
பூமாதேவி என்ற பெயர்தாங்கி
பஞ்ச பூதத்தில் நிலமானவள்
நதிகளில் பெயராகி
பஞ்ச பூதத்தில் நெருப்பானவள்

அக்கினி என்ற பெயர்தாங்கி
பஞ்ச பூதத்தில் நீரானவள்
சுவாசம்தந்து அம்மாவாகி
பஞ்ச பூதத்தில் காற்றானவள்!!!

**ப.ராஜஸ்ரீ**

**முதலாமாண்டு இயற்பியல் துறை 'ஆ' பிரிவு**

## சைக்கிள்




என்னைப் போலவே இருகால்களை
உடையவன் நீ!
என் கால்களின் சுமையை
குறைத்தவன் நீ!!
மாசுபாட்டை குறைப்பவன் நீயே!!!
உன்னை உபயோகிப்பதால்
பெருமையடைந்தேன் நானே!!!!
ஏழைகளின் எமாஹா நீ......

**லா.நந்தினி**

**முதலாமாண்டு இயற்பியல் துறை 'ஆ' பிரிவு**

## தாய்

நீதான் எனக்குத் தாயாக
வரபோகிறாய் என்று தெரிந்திருந்தால்...
குறைப்பிரசவத்தில் கூட பிறந்திருப்பேன்

உன் சுமையைக் குறைக்க!
என் வலியை
உன்வலியாய்க் கருதி எல்லா
தருணத்திலும் எனக்கு வலி
தெரியாமல் என்னைக் காத்தாய்!
ஒரு தாயாக மட்டுமின்றி
சிறந்த தோழியாகவும்
எனக்கு அறிவுரை கூறி
சிறந்த சான்றோராகத் திகழ்ந்தாய்!
நான் எத்தனை தவறுகள்
செய்தாலும் மன்னிப்பை மட்டுமே
தண்டனையாய் தரும் ஒரே
நீதிபதி என் தாய்...!!

**லி.சிந்துஜா**

**இரண்டாமாண்டு இயற்பியல் துறை 'ஆ' பிரிவு**

## என் தோழி

தோல்வி எனைத் தொடும் முன்னே
தோழமையுடன் தோள் கொடுப்பாயடி...
கவலைகள் மனதை
காயப்படுத்தும் முன்னே
காயத்தை ஆற்றும் மருந்தாக
வருவாயடி...
ஒருநாள் பேசாவிட்டால்
ஒரு ஜென்மம் போனதடி – என
நீ துடிப்பதை நான் நன்கு
அறிவேனடி...

நினைவினில் நிஜமானவளே – என்
கனவிலும் கரைந்தாயடி...
என் தோழி என்ற உரிமையுடனே
உன் தோழில் சாய்வேனடி...
உன் சிநேகிதி என்ற உரிமையுடனே
உன் தோளில் சாய்வேனடி...
உன் சிநேகிதி என்ற உரிமையுடனே
உனை நான் அதிகாரம் செய்வேனடி...
என் ஒற்றை விழியாக
என் தோழி – நீ
என்னில் என்றுமே
வாழ்வாயடி...!!!

**கே.சந்தோஷ்குமார்**

**முதலாமாண்டு இயற்பியல் துறை 'அ' பிரிவு**

## சந்தோஷம்

மனதின் அமைதிக்காய்
பயணங்கள் தேடி
அலைவதை விட
ஓடக்கரை மணலில்
உன்தாய் கரம்
பிடித்து கொஞ்சம்
நடந்து செல்...
அந்தக் காற்றும்
அந்த நிலமும் தாயின்

புன்னகையில் சுழலும்
அன்பின் விசையென
அறிவாய்....

**து.சந்தோஷ்**

**முதலாமாண்டு இயற்பியல் துறை 'அ' பிரிவு**

## பழமொழிகள்

- வெண்கலம் ஒலிக்கும் பொற்கலம் ஒலிக்காது
- முன்கோபம் பின் இரக்கம்
- முகத்துக்கு முகம் கண்ணாடி
- புலி அடிக்கும் முன்னே கிலி அடிக்கும்.
- பள்ளிக் கணக்கு புள்ளிக் குதவாது.
- தேன் உண்டால் ஈ தேடிவரும்.
- குணம் குப்பையிலே பணம் பந்தியிலே
- **தன்னை வெல்வான் தரணியை வெல்வான்.**

  உணர்வுகளைக் கட்டுக்குள் வைக்க வேண்டும் என்று பெரியோர்கள் உணர்வுகள் சார்ந்த உளவியல் சிந்தனைகளையும் வழங்கியுள்ளனர்.
- **இட்டவன் இடாவிட்டால் வெட்டும் பகை.**

  கொடுக்காதவன் நண்பன் கொடுத்தவன் பகையாளி
- **கண்டது கற்க பண்டிதன் ஆவான்.**

  அனுபவத்தால் செய்முறையில் தெரிந்து அறிந்து கற்பதே கல்வி. வெறும் ஏட்டுக்கல்வியே கல்வியல்ல..
- **மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுத்தர வேண்டுமா?.**

கற்றவர்க்கு என்றும் அச்சமில்லை, எதிலும் அச்சமில்லை இது அனுபவ உண்மை.

- **தீட்டிய மரத்தில் பதம்பார்ப்பது போல்.**

எளியவனைப் பலி கொடுத்து வலியவன் வாழ்வதும் இச்சமுதாயத்தில் மிக அதிகம்.

**அனீஷ்மா**

**முதலாமாண்டு இயற்பியல் துறை 'ஆ' பிரிவு**

## பெண் சுதந்திரம்

பெண் சுதந்திரம் என்பது
மேலை நாட்டின் ஆடையிலும்
இல்லை...
கீழை நாட்டின் கலாச்சாரத்திலும்
இல்லை....
ஒவ்வொரு பெற்றோரின் வளர்ப்பே
பெண் சுதந்திரம்...
அண்ணனிடம் இருக்கும்
பயமும்
தந்தையிடம் இருக்கும்
பணிவும்
தாயிடம் இருக்கும்
அன்பும்
தங்கைக்கு உரைக்கும் அறிவுரையும்
உறவுகளிடம் இருக்கும் நேசமும்
ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கும்
மனித நேயமே பெண்களை

சுதந்திர நோக்கில்
சென்றடைய
செய்யும் திசைகாட்டியாகும்....

**மு.உமாராணி**

**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு**

## வானவில்

ஏழு வண்ண ஆடைகளை உடுத்தி
காண்பவரை மயக்கும் எட்டாவது அதிசயமே!
ஐந்து நிமிடங்கள் கூட தன் அழகை
காட்டாத அழகிய பெண்ணே!
மயிலைப் போல மழையைக் கண்டதும்
தன் அழகை வெளிக்காட்டும் பேரழகியே!
மேகங்களை இணைக்கும்
வண்ணப் பாலமே!
தன் வரவைக் கூறாமல் அழையா
விருந்தாளியாய் வருகிறாயே!
தன் வாழ்நாள் குறைவாய் இருந்தும்
காண்பவரை மகிழ்ச்சியில்
விழ வைக்கும் வர்ணஜாலமே!!

**க.ரஞ்சூரியா**

**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு**

## பெற்றோர்

செதுக்கிய சிலை எல்லாம்
தெய்வம் என்றால்

என்னைப் பெற்ற என் தாயும்
ஒரு தெய்வம்தான்...

என் தந்தை மெழுகுவர்த்தி
போன்றவர்...
அவர் முகம் பார்க்க பிரகாசமாகத்தான்
இருக்கும்... - ஆனால்
அவர் மனமோ வருத்தத்தில்
உருகிக் கொண்டுதான் இருக்கும்....

**மு.வைரமணி**

**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு**

## கருவறை

நீ பிறக்க
கருவறை என்னும்
இருட்டறை இருந்தது - ஆனால்
நான் இருக்க
ஒரு கல்லறை கூடவா
இல்லை...?
ஏக்கத்துடன்
அன்புத் தாய்..!!!

**வெ.கிருஷ்ணன்**

**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.**

## நட்புக் காலங்கள்

எங்கிருந்தோ
விதைகளாகப்
பிறந்து வந்தோம்!!
இன்று
ஒரு செடிப் பூக்களாக
பூத்துக் குழுங்குகிறோம்..!
மறக்க முடியாத
நட்புக் காலங்களை
சுமந்துக் கொண்டும்
சேகரித்துக் கொண்டும்
நடக்கிறோம்!
நட்பு அழைத்துச்
சென்ற பாதையில்
ஆனந்த பவனியும்
சென்றோம்..!
நாம் வைத்த
செல்லப் பெயர்களும்
கிளம்பி நின்றது!
இந்தக் கல்லூரி
நினைவுகளும்
கனவுகளும்
இனிக்கிறது..
சின்னச் சண்டையிலும்
இனிய புரிதல்களைக்
காணும் நட்புகள்
என்றும் தொடரும்....

## புத்தகம்

என் ஆருயிர்
நண்பன்
எனக்கு துரோகம்
செய்ய நினைக்காத
துணையுமாக
தன் அறிவை அப்படியே
எனக்கு ஊட்டும்
ஊடுறுவாளனாக
என் இணைபிரியா
நண்பன்...
உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசத் தெரியாத
நண்பன்...
என்றும் இவனே உனக்குத்
தைரியமூட்டும் உண்மை
நண்பன்....

**பா.தேவி**
**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.**

## முயற்சி

தோல்விகளைப் படிகளாக்கி
தொடர்ந்து செல்லுங்கள் முகம்
சோர்ந்து சோகம் சூழ்ந்திடாமல்
மேலும் முயலுங்கள்!!
வீழ்ந்துவிட்டால் எழுவதற்குக்
கால்கள் இல்லையோ!!
நாளை வெற்றிகாண
நமது நெஞ்சில்

உரமும் இல்லையோ!!
அயர்ச்சியின்றி முயற்சி செய்தால்
ஆகும் வெற்றியே!
தோல்வி அடைந்திடாமல்
வெற்றி மட்டும் கண்டோர் இல்லையே!!


**ஆ.காயத்ரி**
**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.**

## மழை


மேள தாளத்தோடு வானில்
இருந்து வருது இடி
மின்னல் காற்று சுழன்று வீசி
மழையும் பொழியுது
ஏரி குளங்கள் நீர் நிரம்பி
இன்பம் ததும்புது எங்கும்
இஞ்சி மஞ்சள் நெல்லும்
கரும்பும் கொஞ்சி ஆடுது...

வானம் எங்கும்
விழாக்கோலங்கள்
வானம் முழுவதும்
தோரணம் கட்டிய
மின்னல்கள்..
வண்ண பூவினை
சூடிக்கொண்டாள்
வான்மகள் திருமணத்திற்கு
அழைப்புதர வந்தன மழைத்துளிகள்....

**ஆ.காயத்ரி**
**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு.**


மகாகவி
சி.சுப்பிரமணிய பாரதியார்.


by,
G. Rajesh Kumar
II - Phy - B


I - B.Sc (Maths) - 'C'



